பக்கங்கள்: 08
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 28 சனிக்கிழமை 12.03.2022 கதிர் 353

## மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட அறுவர் சிக்கினர்

பலாங்கொடை, நொன்பேரியல் இயற்கை வனத்தில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்ந்த 6 பேரை நொன்பேரியல் வனப்பாதுகாப்பு காரியாலய அதிகாரிகள் நேற்று கைதுசெய்துள்ளனர்.

இவ்வனத்தின் பாதுகாப்பு அதிகாரிகள் வழமையான பாதுகாப்பு ரோந்து நடவடிக்கைகளில் ☞2

# சிறப்புற நடைபெற்ற கச்சதீவு திருவிழாத் திருப்பலி





(கச்சதீவிலிருந்து இ.கலையமுதன்)

கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்தத் திருவிழாத் திருப்பலி நிகழ்வு இன்று காலை யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் ஜெபரட்ணம் அடிகளாரின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

நேற்று கொடியேற்றத்தையடுத்து சிலுவைப் பாதை, நற்கருணை ஆராதனை மற்றும் திருச்சொரூப ☞2

# ராஜபக்ஷக்களுடன் இணைய நாங்கள் முட்டாள்கள் அல்லர்

## மஹிந்தவுக்கு விமல், கம்மன்பில கூட்டாகப் பதிலடி



**எந்தத் தேர்தல் வந்தாலும் ராஜபக்ஷக்களின் குடும்பக் கட்சியுடன் நாம் இணையவேமாட்டோம். அவ்வளவுக்கு நாம் முட்டாள்களும் அல்லர்.**

**- இவ்வாறு முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் கூட்டாகப் பதிலடி வழங்கினர்.**

**'முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் தேர்தலொன்று வரும்போது எங்களைத் தேடி வருவார்கள்' என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.** ☞2

## நிபந்தனையின் அடிப்படையிலேயே சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்போம்!

### ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார தெரிவிப்பு



சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்குமாறு எமக்கு இன்னும் உத்தியோக பூர்வமாக அழைப்பு விடுக்கப்படவில்லை. அவ்வாறு அழைப்பு விடுத்தால் நிபந்தனையின் அடிப்படையிலேயே பங்கேற்போம்.

- இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். ☞2

## மக்களை அணிதிரட்டி கோட்டா அரசுக்கு அதிரடி காட்ட விமல், கம்மன்பில வியூகம்

### மாபெரும் போராட்டத்துக்குத் திட்டம்

'தாய் நாட்டை மீட்போம்' என்ற தொனிப்பொருளின் கீழ் மாபெரும் போராட்டம் நடத்துவதற்கு அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்டுள்ள விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் தீர்மானித்துள்ளனர்.

மக்கள் மத்தியில் உருவாகியுள்ள அரச எதிர்ப்பு 'அலை'யை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இந்தப் போராட்டத்துக்கு அரசில் அங்கம் வகிக்கும் சில பங்காளிக் கட்சிகளும் மறைமுக ஆதரவை வழங்கக்கூடும் எனத் தெரியவருகின்றது.

கடும்போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகளின் பிரதிநிதிகள் பலரும் கூட்டம் நடைபெறும் நாளில், விமல் தரப்புக்கு ஆதரவை வெளிப்படுத்தவுள்ளனர் எனவும் தெற்கு அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

# வடக்கு மீனவர்களுக்கு நிவாரணப் பொதிகள்

## நாளை வழங்குவார் இந்தியத் தூதுவர்

(ந.லோகதயாளன்)

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பக்லே, முற்பகல் காலை 10 மணியளவில் யாழ்ப்பாணத்திலும், பிற்பகல் 2 மணியளவில் மன்னாரிலும் மாவட்ட செயலகங்களில வைத்து மீனவர்களுக்கான நிவாரணப் பொதிகளை வழங்கிவைக்கவுள்ளார்.

வடக்கு மீனவர்கள எதிர்நோக்கும் நெருக்கடி நிலைமையைக் கருத்தில்கொண்டு இந்திய அரசால் 5 ஆயிரத்து 800 ரூபா பெறுமதியிலான ☞2

## புதிய அபிவிருத்திகளை ஓராண்டுக்கு பிற்போடுக

### அரசுக்கு மத்திய வங்கி பரிந்துரை

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி வேலைத் திட்டங்களை தற்காலிகமாகக் கைவிடுமாறு அரசுக்கு, இலங்கை மத்திய வங்கி பரிந்துரை செய்துள்ளது. ☞2

## ஓகஸ்ட்டில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தி மக்கள் ஆணையைப் பெற அரசு தீர்மானம்?

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசு அவசர தீர்மானமொன்றை எடுத்துள்ளது என நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

இவ்வருடத்துக்குள் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கே அரசு முன்னதாக திட்டமிட்டிருந்தது. இதனால் உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலம் ஓராண்டுக்கு நீடிக்கப்பட்டது.

எனினும், மேற்படி முடிவை தற்போது மாற்றியுள்ள அரசு, முதலில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்குத் தயாராகியுள்ளது.

இவ்வருடம் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடருக்கு முன்னர், தேர்தலை நடத்தி மக்கள் ஆணையைப் பெறுவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.



## சிறப்புற நடைபெற்ற ....................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பவனி ஆகியன இடம்பெற்றன.

இந்தத் திருவிழாவுக்கு இலங்கை மற்றும் இந்தியாவில் இருந்து மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களே வருகை தந்தது மையு டன் அவர்கள் உணர்வுபூர்வமாகக் கலந்துகொண்டனர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நிகழ்வில் வடக்கு மாகாண கடற்படைத் தளபதி பிரியந்த பெரேரா, ஓய்வுபெற்ற கடற்படைத் தளபதி அட்மிரல் விஜேகுணரட்ண, யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத்தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன், வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜகத் பளிக்கார, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் கே.விமலநாதன், நெடுந்தீவு பிரதேச செயலர் சத்தியசோதி மற்றும் மதகுருமார்கள், கடற்படை இராணுவ அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், பக்தர்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.

இந்தத் திருவிழாவில் பக்தர்களின் நலன் கருதி சுகாதார வசதிகள், போக்குவரத்து ஒழுங்குகள், உணவு வசதிகள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டன.

## ராஜபக்ஷக்களுடன் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியர்களைப் பிரதமர் நேற்று அலரிமாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

பிரதமரின் இந்தக் கருத்து தொடர்பில் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான விமல் வீரவன்ச எம்.பி., புதிய ஹெல உறுமயவின் தலைவரான உதய கம்மன்பில எம்.பி. ஆகியோர் ஊடகங்களிடம் இன்று பதிலளிக்கும் போது –

எந்தத் தேர்தலையும் எதிர்கொள்ள நாம் தயாராக இருக்கின்றோம். எந்தத் தேர்தல் வந்தாலும் ராஜபக்ஷக்களின் குடும்பக் கட்சியுடன் நாம் இணையவே மாட்டோம். அவ்வளவுக்கு நாம் முட்டாள்களும் அல்லர்.

தேர்தல் அறிவிப்பு வந்ததும் எமது அதிரடி ஆட்டங்களை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியினர் பார்ப்பார்கள்.

நாம் பதவிகளுக்காக அலைபவர்கள் அல்லர். பதவி ஆசை எமக்கு இருந்திருந்தால் அரசுக்குள் இருந்துகொண்டே அரசின் மோசமான செயல்களை விமர்சித்திருக்கமாட்டோம்.

நாட்டின் நலன் கருதியும், இந்த ஆட்சிக்கு ஆணை வழங்கிய மக்களின் நம்பிக்கைக்கும் மதிப்பளித்தே உண்மைகளை வெளியில் உரக்கச் சொன்னோம்; அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தோம். அதனால் எமது அமைச்சுப் பதவிகளை ஜனாதிபதி பிடுங்கி எடுத்தார் – என்றனர்.

## நிபந்தனையின் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

சர்வகட்சி மாநாட்டுக்கு முன்னர் சர்வதேச நாணய நிதியத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கைகள் மற்றும் அரசின் நிதி நிலைவரம் தொடர்பான உண்மையான தரவுகள் எமக்கு வழங்கப்பட வேண்டும். அப்போதுதான் சிறந்த கலந்துரையாடலை முன்னெடுக்க முடியும்.

அவ்வாறு வழங்கினால்தான் நாம் மாநாட்டில் பங்கேற்போம். எமக்கு இன்னும் அழைப்பு விடுக்கவில்லை. அவ்வாறு கிடைத்தால் அது பற்றி பரிசீலிக்கப்படும். இருந்தாலும் ஆவணங்கள் முன்கூட்டியே வழங்கப்பட்டால்தான் பேச்சுக்குச் செல்ல முடியும் – என்றார்.

## புதிய அபிவிருத்திகளை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சுமார் ஓராண்டு வரை பிற்போடுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கான காரணமும் விவரிக்கப்பட்டுள்ளது.

அரசால் பெருமெடுப்பில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு இலட்சம் வேலைத்திட்டமும் இதில் உள்ளடங்கும். எனினும், மத்திய வங்கியின் யோசனையை அரசு ஏற்குமா என்பது பற்றி இன்னும் தெரியவரவில்லை.

நாட்டில் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், அத்தியாவசிய சேவைகளுக்கு, தேவைகளுக்கு முக்கியத்துவம் வழங்கும் வகையிலேயே இந்தப் பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது.

## வடக்கு மீனவர்களுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிவாரணப் பொதிகள் இந்தியத் தூதுவரால் வழங்கிவைக்கப்படவுள்ளன.

இந்தப் பொதிகளில் யாழ்ப்பாணம் மீனவர்களுக்கு 600 பொதிகளும், மன்னார் மீனவர்களுக்கு 200 பொதிகளும் அனுமதிக்கப்பட்டபோதும் இந்தியத் தூதுவரின முன்னிலையில் இரு மாவட்டங்களிலும் தேர்வு செய்யப்பட்ட தலா 30 மீனவர்களே அழைக்கப்பட்டுள்ளனர்.

எஞ்சியவை தொடர்பான ஏற்பாடுகளில் மன்னாரில் மேலும்70 பேர் அழைக்கப்பட்டுள்ளனர்.

## மாணிக்கக்கல் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஈடுபட்டிருந்தபோது இவர்கள் தப்பியோட முற்பட்டுள்ளனர்.

இவர்கள் உடனே மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர். மாணிக்கக்கல் அகழ்வுக்காகப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களுடம் மீட்கப்பட்டுள்ளன.

இவர்கள் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

இவ்வனத்தில் சட்டவிரோதமாக இரத்தினக்கல் அகழ்வுகள், காடழிப்பு, வேட்டையாடுதல் ஆகிய குற்றச்சாட்டுக்கள் அதிகரித்து வருவதால் இங்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விளம்பரத்
தொடர்புகளுக்கு -
தொலைபேசி
இலக்கம்-
076 443 8622

சபரிமலை
ஸ்ரீ ஐயப்பன் றேடர்ஸ்
Sabarimalai Sri Iyappan Traders
இல.315, கண்டிறோட், கிளிநொச்சி.
No. 315, Kandy Road, Kilinochchi.
Tel:- 021 228 3701,076 307 8091




விசேட நிகழ்வுகளுக்கும், வியாபார நிலையங்களுக்கும் இலவச Delivery -
அனைத்துத் தேவைகளுக்கும்
077 986 2476 - 077 983 8091 எனும் இலக்கங்களுக்கு
வரும் ஓடர்களுக்கு சலுகை வழங்கப்படும்.
076 307 8091, 021 228 3701, 077 986 2470

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நாட்டின் துரதிர்ஷ்டம் இது!

நாட்டின் மிக மோசமான பொருளாதார நிலைமை குறித்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சில கருத்துக்களை முன்வைத்திருக்கிறார். அவை கவனிக்கப்பட வேண்டியவை.

"கடந்த 2005 இலிருந்து 2014 வரையுமிருந்த நாட்டின் ஆட்சியாளர்கள் பில்லியன் கணக்கில், ட்ரில்லியன் கணக்கில் கொள்ளையடித்தமையின் காரணமாகவே இன்றைய இந்த நிலையை நாம் அனுபவிக்கின்றோம். அன்று நாட்டு நிர்வாகத்தின் பெயரில் பணத்தைச் சூறையாடும் இலக்கில் கணக்கு வழக்கின்றிக் கடன் எடுத்ததால் தான் இன்று இந்த நிலைமை. இப்போதும் 'கடன், கடன், கடன்' என்ற நிலையில் அல்லலுறுகின்றோம்.

"பெருஞ் செலவில் மத்தள விமானநிலையத்தை அமைத்தார்கள்; அங்கு ஒரு விமானமும் போவதில்லை.

"அம்பாந்தோட்டையில் ஒரு துறைமுகத்தையே கடன் வாங்கி அமைத்தனர். அது கேலிக்கிடமானது. ஒரு கப்பலும் போவதில்லை.

"இப்படிக் கோடிக்கணக்கில் கணக்கு வழக்கின்றிச் செலவிட்டனர். ஆனால் அதேசமயம் தங்கள் பைகளையும் தாராளமாக நிரப்பிக் கொண்டனர்.

"அந்தக் கடனைத்தான் திரும்பச் செலுத்த முடியாது நாடு அல்லலுறுகின்றது. நாடு கடனில் மூழ்கியிருக்கிறது. இதனால்தான் டீசல், பெற்றோல் வாங்க எங்களிடம் பணம் இல்லை.

"இதனால் தான் நாங்கள் இருட்டில் இருக்கிறோம். இதனால்தான் மக்கள் உண்ண உணவில்லாமல் பசி பட்டினியில் வாடுகிறார்கள்." – என்று விசனிக்கின்றார் சந்திரிகா.

இவை மறுக்கப்பட முடியாத உண்மைகள். ராஜபக்ஷவின் முன்னைய ஆட்சிக்காலத்தில் வாங்கிய கடனை மீளச் செலுத்த முடியாமல்தான் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை தொண்ணூற்றி ஒன்பது ஆண்டுகளுக்கு சீனாவிடம் குத்தகைக்கு ஒப்படைக்க வேண்டிய கட்டம் கூட ஏற்பட்டது. அதை அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளிப்படையாக தெரிவித்திருந்தார்.

நாட்டுக்குச் சாத்தியமே இல்லாத திட்டங்களில் பல்லாயிரம் கோடி ரூபாவை தம் இஷ்டப்படி செலவு செய்து, நாட்டைப் பெரும் கடனாளி ஆக்கிவிட்ட அரசுத் தலைவர்கள், தமது அதிகார காலம் முடிந்ததும் தமது பைகளில் சுருட்டிக் கொண்ட தாராள சொத்துக்களுடன் லாவகமாகக் கையை வீசிக் கொண்டு புறப்பட்டு விடுகின்றனர்.

மீண்டும் ஆட்சி அதிகாரம் கிட்டும்போது முன்னைய காலத்தில் சூறையாடி, வெளிநாடுகளில் பதுக்கி வைத்திருக்கும் கறுப்புப் பணத்தை நாட்டுக்குள் வெள்ளை பணமாக மாற்றும் கைங்கரியத்தையும் கனகச்சிதமாக ஒப்பேற்றி விடுகின்றனர். இந்த போக்கு அனுமதிக்கப்படக் கூடாது.

சாத்தியமே இல்லாத – பயன்தராத – திட்டங்களுக்கு, இடையில் கிடைக்கும் கையூட்டுக்காக, பெருமளவு பணத்தைக் கோடி கோடியாகச் செலவிட்டு, நாட்டை திவாலாக்கி இருக்கும் நிலைமைக்குப் பொறுப்பானவர்கள் உரியமுறையில் தண்டிக்கப்பட வேண்டும்.

பொறுப்புக்கூறலே நிலைநாட்டப்பட இடமே இல்லாத நாட்டில் – தண்டனை விலக்களிப்பே நாட்டின் பொதுப் பண்பியல்பாக இருக்கும் ஒரு தேசத்தில் – இத்தகைய பேரழிவை ஏற்படுத்திய அரசியல்வாதிகளையும் நீதியின் முன் – சட்டத்தின் வாசலில் – கொண்டு போய் நிறுத்த வாய்ப்பேயில்லை என்பதுதான் இலங்கையில் துரதிர்ஷ்டம்.

# ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் யாழில் விரைவில் நடத்தப்படும்!

## அரச அதிபர் மகேசன் உத்தரவாதம்

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம், அதன் இணைத் தலைவர்களிடம்திகதிகோரப்பட்டு,வழமைபோன்று கூட்டப்படும் என மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளைமகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தை கூட்டுமாறு, அந்தக் குழுவின் பிரதமரின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள கீத்நாத் காசிலிங்கம், மாவட்ட செயலாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

இந்த விடயம் குறித்து யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர், யாழ்ப்பாண மாவட்ட மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டங்களை கூட்டுமாறு, யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதமரின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள கீத்நாத் காசிலிங்கம், நேற்று முன்தினம் (09) கடிதம் மூலம் அறியப்படுத்தியுள்ளோம் எனத் தெரிவித்தார்.

பிரதமரின் இணைப்புச் செயலாளர் என்ற அடிப்படையில், அவர் இவ்வாறானதொரு கடிதத்தை அனுப்பியுள்ளார் எனத் தாம் கருதுகிறோம் எனவும் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் குறிப்பிட்டார்.

எவ்வாறிருப்பினும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களான வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன்-ராமநாதன் ஆகியோரிடம் திகதி கோரப்பட்டு,அதற்கமையவேவழமைபோன்று கூட்டத்தைக் கூட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். அதேநேரம், கூட்டம் தொடர்பான அழைப்பிதல், யாழ்ப் பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதமரின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள கீத் நாத்காசிலிங்கத்திற்கும் அனுப்பப்படும் என்றும் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

# நாடாளுமன்றத்துக்குள் நேற்று பாண் துண்டுடன் வந்த எம்.பி.!

## அவையில் அமளி



ஐக்கிய மக்கள் சக்தியின் குருணாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார நேற்று (வெள்ளிக்கிழமை) நாடாளுமன்ற அவைக்குள் கால் இறாத்தல் பாணை கொண்டு வந்ததன் காரணமாக நேற்று பிற்பகல் அவையில் அமளி ஏற்பட்டுள்ளது.

கையில் எடுத்து வந்த பாணை வைத்துக் கொண்டு உரையாற்றிய நளின் பண்டார, கால் இறாத்தல் பாணை கொள்வனவு செய்து சாப்பிட்டு வாழ்ந்து வந்த மக்களுக்கு, பாண் விலை அதிகரித்துள்ளதால், பட்டினியில் இறக்க நேரிட்டுள்ளது எனக் கூறியுள்ளார்.

மக்களுக்கு தற்போது பாண் என்ற வார்த்தையை கூட கூறிக்கொள்ள முடியாமல் இருக்கின்றது. அதேவேளை நாடு முழுவதும் சமையல் எரிவாயு, எரிபொருள், பால் மா வரிசைகளில் மக்கள் நிற்கின்றமையால், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தமது ஊர்களுக்குச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. பாணின் விலை அதிகரித்துள்ளதால், கால் இறாத்தல் பாண் 35 ரூபாவாக அதிகரிக்கும். நாட்டில் தற்போது தோல்வியான ஆட்சி நிர்வாகம் உருவாகியுள்ளது. பஸில் ராஜபக்ஷ ஏழு மூளைகளைக் கொண்டவர் எனக் கூறினாலும் தலையில் சிறிதளவும் மூளையை கொண்டிராதவர் எனவும் நளின் பண்டார மேலும் தெரிவித்துள்ளார்.

# கொழும்பு பிரபல பாடசாலை ஒன்றில் மாணவன் ஆசிரியையால் துஷ்பிரயோகம்

ஆசிரியை ஒருவர் பாடசாலை மாணவன் ஒருவரை துஷ்பிரயோகம் செய்த சம்பவம் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்துக்கு கொழும்பு மேலதிக நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

34 வயதுடைய ஆசிரியை ஒருவர் பாடசாலை மாணவன் ஒருவரை நான்கு வருடங்களாகத் துஷ்பிரயோகம் செய்தார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள முன்னணி பாடசாலை ஒன்றின் மாணவன் ஒருவரே இவ்வாறு துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார் எனவும், அந்த மாணவனுக்கு தற்போது 20 வயது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வருடாந்த கிரிக்கெட் போட்டியில் 16 வயது மாணவனும் ஆசிரியையும் ஒருவருக்கொருவர் பழக்கமாகியுள்ளனர்.

பின்னர் ஆசிரியைக்கும் மாணவருக்கும் வாட்ஸ்அப் மூலம் தொடர்பு ஏற்பட்டது.

பின்னர் பாடசாலை கணினி அறையில் ஆசிரியை மாணவனை பாலியல் வன் கொடுமை செய்தமை தெரியவந்தது.

மேற்படி ஆசிரியையும் மாணவனும் கல்கிசையில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றுக்கு சுமார் 60 தடவைகள் சென்றுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது. ஆசிரியை தனது அடையாளஅட்டையைப் பயன்படுத்தி ஹோட்டலில் முன் பதிவு செய்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது. இதன்படி, சம்பவம் தொடர்பில் உடனடி யாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கொழும்பு மேலதிக நீதிவான் லோச்சனி அபேவிக்ரம பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்துக்கு உத்தரவிட்டார்.

# விமலின் மனைவிக்கு எதிரான வழக்கின் தீர்ப்பு ஒத்திவைப்பு!

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவின் மனைவி சசி வீரவன்ஸ விற்கு எதிரான வழக்கு தொடர்பான தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, குறித்த வழக்கின் தீர்ப்பு மே மாதம் 6 ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளதாக கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துக்குப் பொய்யான தகவல்களை சமர்ப்பித்து இராஜதந்திர கடவுச்சீட்டைப் போலியாகத் தயாரித்தமை தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் அவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இரண்டு வழக்குகளின் பரிசீலனை அண்மையில் நிறைவடைந்தது.

இதனையடுத்து குறித்த வழக்கின் தீர்ப்பு நேற்று (வெள்ளிக்கிழமை) அறிவிக்கப்படும் என கொழும்பு பிரதான நீதிவான் புத்திக ரகல பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி அறிவித்திருந்தமை என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ரஷ்யா- உக்ரைனுக்கிடையிலான மூன்றாவது பேச்சும் தோல்வியில்



ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கு இடையில் நடைபெற்ற மூன்றாவது கட்டப் அமைதிப் பேச்சு தோல்வியில் முடிவடைந்துள்ளது. ரஷ்ய வெளியுறவுத் துறை அமைச்சர் செர்கெய் லாவ்ரோவுக்கும் உக்ரைன் வெளியுறவுத் துறை அமைச்சர் டிமிட்ரோ குலேபாவுக்கும் இடையே துருக்கியின் துறைமுக நகரான ஆன்டால்யாவில் பேச்சு நடைபெற்றது.

உக்ரைனில் போர் நடைபெற்று வரும் பகுதிகளிலிருந்து பொதுமக்களை வெளியேற்றுவதற்கான பாதுகாப்பு வழித்தடங்கள் அமைப்பது, அங்கு போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்வது தொடர்பாக விவாதிப்பதற்காக அந்தப் பேச்சு நடைபெற்றது.

எனினும், முக்கிய விவகாரங்களில் ஒருமித்த கருத்து எட்டப்படாததால் எந்த ஒப்பந்தமும் பேச்சில் மேற்கொள்ளப்படவில்லை என்று உக்ரைன் வெளியுறவுத் துறை அமைச்சர் டிமிட்ரோ குலேபா தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில், 'லாவ்ரோவுடன் நடைபெற்ற பேச்சு, உடனடி சண்டை நிறுத்தத்துக்கு ஒப்புக்கொள்ள அவர் தயாராக இல்லை. அவர் முன்வைக்கும் அம்சங்கள் அனைத்தும் போரில் உக்ரைன் சரணடைய வேண்டும் என்பதைப் போல் உள்ளது. ஆனால், ரஷ்யா விடம் உக்ரைன் ஒருபோதும் சரணடையாது. போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து பொதுமக்களை வெளியேற்றுவதற்கான பாதுகாப்பு வழித்தடம் அமைப்பதற்கான நம்பிக்கையையும் செர்கெய் லாவ்ரோவ் பொய்யாக்கி விட்டார்.

எனினும், போரால் பொதுமக்களுக்கு ஏற்படும் இன்னல்களுக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுத் தொடர வேண்டும் என்று இருவரும் ஒப்புக் கொண்டோம்' என கூறினார்.

பேச்சுக்கு பிறகு கருத்து தெரிவித்த ரஷ்ய வெளியுறவுத் துறை அமைச்சர் செர்கெய் லாவ்ரோவ், 'உக்ரைன் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக அந்த நாடு அனுப்பும் எந்த பிரதிநிதிகளுடனும் பேச்சு நடத்த ரஷ்யா தயாராக இருக்கிறது.

எனினும், சண்டை நிறுத்தம் மற்றும் பாதுகாப்பு வழித்தடங்கள் குறித்த இருதரப்பு பேச்சு பெலாரஸில் தற்போது பல சுற்றுகளாக நடைபெற்று வரும் பேச்சுக்கு மாற்று ஏதும் இல்லை. தற்போது உக்ரைன் வெளியுறவுத் துறை அமைச்சருடன் நடைபெற்றுள்ள பேச்சு அதனை நிரூபித் துள்ளது.

அந்தப் பேச்சு, உக்ரைன் தனது மேற்கத்திய சார்பு நிலையைக் கைவிட்டு நடுநிலை வகிக்க வேண்டும், ஆயுதங்களைக் கைவிடவேண்டும் என்ற ரஷ்யாவின் நிபந்தனைகளை முன் வைத்தேன். அதற்கான பதிலை உக்ரைன் அரசிடமிருந்து எதிர்பார்த்துள்ளேன்.

அந்த நாட்டுக்கு ஆயுதங்களை வழங்குவதன் மூலம் மேற்கத்திய நாடுகள் பிரச்சினையை மேலும் தீவிரமாக்குகின்றன. இந்த விவகாரத்தில் எங்கள் மீது விதித்துள்ள பொருளாதாரத் தடைகளை நாங்கள் சமாளிப்போம். பொருளாதார விவகாரத்தில் ரஷ்யா எப்போதுமே மேற்கத்திய நாடுகளை சார்ந்து இயங்கவில்லை' என கூறினார்.

போர்நிறுத்தம் தொடர்பாக உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையே பெலாரஸில் இதுவரை நடைபெற்ற மூன்று கட்ட அமைதி பேச்சில் தோல்வியில் முடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது

இந்த பேச்சு நடைபெறுவதற்கு முன்னதாக கருத்து தெரிவித்திருந்த உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி, 'சர்ச்சைக்குரிய விடயங்களுக்கும், ரஷ்யாவுடனான மோதலுக்கும் நேட்டோ அமைப்பு பயப்படுகிறது. உக்ரைனை ஏற்க நேட்டோ தயாராக இல்லை என்பதை புரிந்துகொண்டு இந்த விடயத்தில் நான் அமைதியாகி விட்டேன். எதையும் காலில் விழுந்து பெறுகிற நாடாக உக்ரைன் இருக்கக் கூடாது. கிழக்கு உக்ரைனின் டான்பாஸ், லுகான்ஸ்க் ஆகிய 2 ரஷ்ய சார்பு பிரதேசங்களின் நிலை குறித்து சமரசம் செய்ய தயார். (இவ்விரு பகுதிகளையும் உக்ரைன் மீது போர் தொடுப்பதற்கு முன்பாக ரஷ்யா சுதந்திர பகுதிகளாக அங்கீகரித்துள்ளது.)

கிரீமியாவை ரஷ்யாவின் அங்கம் என அங்கீகரிக்கும் விடயத்தில் பேச்சுக்கு தயார்' என கூறியிருந்தார்.

## அமெரிக்காவை உளவு பார்க்க செயற்கைகோள்கள் விண்ணில்

### ஏவியது வடகொரியா



அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கைகளை உளவு பார்ப்பதற்காக செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவ உள்ளதாக வடகொரியா அறிவித்துள் ளது.

வடகொரியாவில் உள்ள தேசிய விண்வெளி மேம்பாட்டு நிர்வாகத்தை ஆய்வு மேற்கொண்ட அந்நாட்டின் அதிபர் கிம் ஜாங் உன், கடந்த ஆண்டு அறிவித்தபடி, இராணுவ உளவு செயற்கைக் கோள்கள் விண்ணில் ஏவப்படும் என்று கூறினார். இந்த செயற்கைக்கோள்கள் அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளின் இராணுவ நடவடிக்கைகளை ஆய்வு செய்யும் என்று கூறப்படுகிறது.

இதற்காக இரண்டு கட்ட செயற்கைக் கோள்கள் பரிசோதனையிலும் வடகொரியா ஈடுபட்டுள்ளது. தங்கள் தேசத்தின் பாதுகாப்புக்காகவே இந்த செயற்கைக்கோள்கள் ஏவ உள்ளதாக வடகொரியா தெரிவித்துள்ளது.



## உக்ரைன் நாட்டு தலைநகரை நெருங்கின ரஷ்யப் படைகள்

ரஷ்ய படைகள், கடந்த 24 மணிநேரத்தில், உக்ரைன் தலைநகர் கிவ்விற்கு 5 கிலோமீற்றர் அருகே நகர்ந்துள்ளதாக அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம் வடமேற்குப் பகுதியில், தலைநகரிலிருந்து 15 கிலோமீற்றர் தூரத்தில் ரஷ்ய படைகள் நிலை கொண்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

உக்ரைன் மீதான படையெடுப்பு ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து, ரஷ்ய படைகள் பல்வேறு வகையான 775 ஏவுகணைகளைத் தாக்கியுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், ரஷ்ய மற்றும் உக்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சர்களுக்கு இடையே நேற்று இடம்பெற்ற முதற்கட்ட நேரடிப் பேச்சில், போர்நிறுத்தம் தொடர்பில் எவ்வித முன்னேற்றங்களும் ஏற்படவில்லை யெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ரஷ்ய உக்ரைன் போர் 15 ஆவது நாளாகவும் நேற்று இடம்பெற்றது.







## ரஷ்யாவுக்கு எதிரான பதிவுகளை அனுமதிக்கும் பேஸ்புக், இன்ஸ்டாகிராம்

ரஷ்ய படையெடுப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் ரஷ்யா மற்றும் பெலாரஸ் தலைவர்கள் மற்றும் ரஷ்யப் படையினருக்கு எதிரான வெறுப்பு பதிவுகளை சில நாடுகளில் வெளியிட பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் அனுமதி அளித்துள்ளது.

இதற்காக தனது வெறுப்பு பேச்சு தொடர்பான கொள்கைகளில் தற்காலிக மாற்றங்களை பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் தாய் நிறுவனமான மெட்டா மேற்கொண்டுள்ளது.

பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராமின் இந்த வெறுப்பு பேச்சு தொடர்பான கொள்கை மாற்றங்களின் அடிப்படையில் உக்ரைன் மற்றும் போலந்தில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், பெலாரஸ் ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகான்கோ தொடர்பான வெறுப்பு இடுகைகளுக்கு அனுமதி அளிக்கப்படும்.

இதேவேளை, கடந்த வாரம் முதல் ரஷ்யாவில் பேஸ்புக் நிறுவனத்திற்கு முழுமையாக தடை விதிக்கப்பட்டது. ரஷ்யாவுக்கு எதிராக பிரசாரம் செய்து வருவதால், அந்நிறுவனத்திற்கு எதிராக ஊடக ஒழுங்குமுறை சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

பேஸ்புக் நிறுவனம் ரஷ்யாவுக்கு எதிராக பாரபட்சமாக நடந்து கொள்கிறது. இதனை கூட்டாட்சி சட்டத்தை மீறிய செயலாக ரஷ்ய அரசு கருதுகிறது என ரஷ்யாவின் இணையதணிக்கை நிறுவனம் வெளியிட்ட அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டது. ஏற்னவே, ரஷ்ய செய்தி சேவைகளான ஆர்.ரி. மற்றும் ஸ்புட்னிக் ஆகியவற்றை பேஸ்புக் நிறுவனம் தடை செய்தது. இதற்கு பதிலடியாக பேஸ்புக் மீது ரஷ்யா தடைவிதித்தது.

ஏற்கனவே டுவிட்டர், இன்ஸ்டாகிராம், யூடியூப் போன்ற சமூக வலைதள ஊடகங்கள் மீதும் ரஷ்யா கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ரஷ்யா – உக்ரைன் மோதலில் நேரடிப் பேச்சே போர் நிறுத்தத்திற்கு வழிவகுக்கும் என இந்தியா உறுதி




உக்ரைனில் அமெரிக்கா இரசாயன ஆயுதங்களை உருவாக்கிவருவதாக குற்றஞ்சாட்டியுள்ள ரஷ்யா, அது தொடர்பாக விசாரிக்க ஐ.நாவின் பாதுகாப்புச் சபையை உடனே கூட்ட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தது. இதையடுத்து ஐ.நா. பாதுகாப்புச் சபைக் கூட்டம் நேற்று நியூயோர்க் நகரில் நடைபெற்றது.

இந்தக்கூட்டத்தில் உரையாற்றிய ரஷ்யாவின் ஐ.நா.வுக்கான நிரந்தரப் பிரதிநிதி வசிலி நெபென்சியா, அமெரிக்க பாதுகாப்பு அமைச்சகத்தின் ஆதரவுடன் உக்ரைன் இராணுவத்தின் இரசாயன உயிரியல் ஆயுதத் தயாரிப்புத் திட்டம் பற்றிய அதிர்ச்சியூட்டும் உண்மைகளை நாங்கள் கண்டுபிடித்துள்ளோம், என தெரிவித்தார். உக்ரைனில் 30 உயிரியல் ஆய்வகங்களின் வலையமைப்பு இருப்பதை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகத்திடம் இருப்பதாகவும் அவர் கூறினார்.

இதற்கு மறுப்புத் தெரிவித்த ஐ.நாவுக்கான அமெரிக்க பிரதிநிதி, உக்ரைனிடம் இரசாயன உயிரியல் ஆயுதத் தயாரிப்புத் திட்டம் இல்லை என்றும், அமெரிக்காவால் ஆதரிக்கப்படும் உயிரியல் ஆயுத ஆய்வகங்கள் எதுவும் உக்ரைனிலோ, ரஷ்யாவின் எல்லைக்கு அருகிலோ இல்லை என்றும் மறுப்புத் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதியான டி.எஸ்.திருமூர்த்தி, உக்ரைனில் தற்போதைய நிலைமை குறித்து இந்தியா பலமுறை தனது ஆழமான கவலையை வெளிப்படுத்தியுள்ளது எனவும், ரஷ்யா – உக்ரைன் நாடுகளுக்கிடையே நடக்கும் நேரடி பேச்சே போர் நிறுத்தத்திற்கு வழிவகுக்கும் என்று இந்தியா நம்புவதாகவும் கூறியுள்ளார்.

தூதரகரீதியானநடவடிக்கைகளையும் பேச்சுப் பாதையையும் தவிர, யுத்தத்தை நிறுத்திட வேறு வழியில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



## பஞ்சாபில் வென்ற ஆம் ஆத்மியின் பகவந்த் மான் மாநில முதல்வராக 16 ஆம் திகதி பதவியேற்கிறார்

பஞ்சாப் மாநிலத்தில் மொத்தமுள்ள 117 தொகுதிகளில் 92 தொகுதிகளில் ஆம் ஆத்மி வெற்றி பெற்று ஆட்சியைக்கைப்பற்றியது. காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணியை ஆம் ஆத்மி தோற்கடித்து பஞ்சாபில் முதல்முறையாக ஆட்சியைப் பிடித்துள்ளது.

இதையடுத்து, பஞ்சாப் முதல்வர் சரண்ஜித் சிங் தனது ராஜினாமா கடிதத்தை ராஜ்பவனுக்குச் சென்று நேற்று ஆளுநரிடம் வழங்கியிருந்தார். சட்டசபையைக் கலைத்து ஆம் ஆத்மியின் புதிய சட்டசபைக்கு வழி வகுக்குமாறும் பரிந்துரைத்தார்.

முதல்வர் வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்ற பகவந்த் மான் பஞ்சாப் முதல்வராக வரும் 16 ஆம் திகதி பதவியேற்கிறார். இவர் பகத்சிங் பிறந்த ஊரான கட்கர் கலானில் முதல்வராக பதவியேற்றுக் கொள்ளவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பதவியேற்பு விழாவில் பங்கேற்க அழைப்பதற்காக நேரில் சென்ற பகவந்த் மான் அரவிந்த் கெஜ்ரிவால் காலில் விழுந்து ஆசி பெற்றார். பின்பு, பதவியேற்பு விழாவில் கலந்து கொள்ளும்படி டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கும், துணை முதல்வர் மணீஷ் சிசோடியாவிற்கும் அழைப்பு விடுத்தார்.

இதற்கிடையே, அமிர்தசஸில் நாளையதினம் ஆம் ஆத்மி சார்பில் வெற்றிக் கொண்டாட்டப் பேரணியும் நடைபெறவுள்ளதாகவும் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கச்சத்தீவு திருவிழாவில் பாதுகாப்பில் பொலிஸார்

கச்சத்தீவு திருவிழாவிற்கு தமிழகத்தின் இராமேஸ்வரம் துறைமுகத்தில் இருந்து ஒரு நாட்டுப் படகு, மூன்று விசைப் படகுகளில் 81 பேர் பயணம் மேற்கொண்டனர். அங்கு 150இற்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் கொரோனா விதிமுறைகளை பின்பற்ற அறிவுறுத்தி வருகின்றனர். கச்சத்தீவில் புனித அந் தோனியார் ஆலயத் திருவிழா வருடந்தோறும் மார்ச் மாதத்தில் நடைபெறுவது வழக்கம். இந்த திருவிழாவில் இலங்கை, இந்திய பக்தர்கள் கலந்து கொண்டு இருநாட்டு உறவுகளை மேம்படுத்தும் திருவிழாவாக இந்தத் திருவிழா நடை பெறுகிறது.

இந்த ஆண்டுக்கான திருவிழா நேற்று மாலை கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலயத்தில் கொடியேற்றத்துடன் தொடங்கி சிலுவைப்பாதை, சிறப்புத் திருப்பலி நிகழ்வுகள் நடைபெற்றன. இன்று மீண்டும் சிலுவைப் பாதை நடத்தி சிறப்பு திருப்பலி நடத்திய பின்னர் கொடி இறக்கப்பட்டு கச்சத்தீவு திருவிழா நிறைவு பெறுகிறது. இதற்காக தமிழகத்தில் இருந்து 100 பக்தர்கள் கலந்து கொள்ள அனுமதி அளிக்கப்பட்ட நிலையில் 81 பக்தர்கள் மட்டுமே கச்சதீவுக்கு சென்றுள்ளனர்.

கச்சத்தீவு திருவிழாவுக்கு செல்பவர்களை முழுமையாகச் சோதனை செய்வதற் காகவும், அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காகவும் 150 பொலிஸாரும், இந்திய கடலோர பொலிஸார் மரைன் பொலிஸார், கியூ பிரிவு பொலிஸார், சுகாதாரத்துறை, வருவாய்த்துறை அதிகாரிகள் உள்ளிட்டோரும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.



## காங்கிரஸ் கட்சி விரும்பினால் மக்களவைத் தேர்தலில் பா.ஜ.கவுக்கு எதிராக இணையலாம் என மம்தா அழைப்பு



இந்தியாவில் நடந்துமுடிந்த ஐந்து மாநிலங்களின் தேர்தல் முடிவுகள் குறித்து, திரிணாமுல் காங்கிரஸ் தலைவரும் மேற்கு வங்காள முதல்வருமான மம்தா பானர்ஜி ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாடியுள்ளார்.

கோவாவில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி தொடங்கப்பட்ட மூன்று மாதங்களில் 6 சதவீத வாக்குகளைப் பெற்றிருக்கிறது, இது போதும். உத்தரப் பிரதேசத் தேர்தலில் வாக்குப்பதிவு இயந்திரங்களில் முறைகேடுகள் நடந்துள்ளன. சமாஜ்வாடி கட்சியின் தலைவர் அகிலேஷ் யாதவ் சோர்ந்துவிடாமல், அந்த இயந்திரங்களை தடயவியல் சோதனை நடத்தும்படி வலியுறுத்த வேண்டும். அகிலேஷ் யாதவின் வாக்கு சதவீதம் இந்த முறை 20 சதவீதத்திலிருந்து 37 சதவீதமாக அதிகரித்துள்ளது.

காங்கிரஸ் கட்சி நம்பகத்தன்மையை இழந்து வருகிறது. காங்கிரஸ் கட்சி விரும்பினால் 2024 மக்களவைத் தேர்தலில் பா.ஜ.கவுக்கு எதிராக அனைவரும் ஓரணியில் இணையலாம். இப்போதைக்கு ஆக்ரோமாக இருக்க வேண்டியதில்லை. நேர் சிந்தனையோடு இருக்கலாம். இந்த வெற்றி பா.ஜ.கவுக்கு பெரும் இழப்பாக அமையும். இந்தச் சட்டசபைத் தேர்தல் முடிவுகள் 2024 மக்களவைத் தேர்தலில் எதிரொலிக்கும் என்பது சாத்தியமில்லை, என்று மம்தா பானர்ஜி தெரிவித்திருக்கிறார்.

## மாநிலத்தில் உள்ள கல்விக் கொள்கையின்படி பல்கலைக்கழங்கள் செயல்பட வேண்டும்

### ஸ்டாலின் தெரிவிப்பு




இந்தியப் பல்கலைக் கழகங்களின் கூட்டமைப்பின் தென் மண்டல துணை வேந்தர்கள் சந்திப்புக்கான இரண்டுநாள் அமர்வு கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் உள்ள அரங்கில் நடைபெற்றது. கூட்டத்தை தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி தொடங்கி வைத்து உரையாற்றினார். இதில் சிறப்பு விருந்தினராக தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சென்னை யில் இருந்தவாறு காணொலி மூலம் பங்கேற்று சிறப்புரை யாற்றினார்.

தமிழ் நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள் தரமான உயர்கல்வி வழங்குவதில் மற்ற மாநிலங்களுக்கெல்லாம் முன்னோடியாகத் திகழ்கின்றது. 2020-21ஆம் ஆண்டுக்கான தேசிய நிறுவனங்களுக்கான தரவரிசைக் கட்டமைப்பில் அனைத்திந்திய அளவில் தமிழ்நாட்டின் 19 பல்கலைக்கழகங்கள் மற்றும் 33 கல்லூரிகள் முதல் நூறு இடங்களுக்குள் உள்ளன. சென்னையிலுள்ள லயோலா கல்லூரி அனைத்து இந்திய அளவில் மூன்றாவது இடமும் பெற்று தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்திருக்கின்றது.

பள்ளிக் கல்வி முடித்து, உயர்கல்வி பயிலவரும் மாணவர்களின் சேர்க்கை வீதம், தேசிய அளவில் 27.1 ஆகும். ஆனால், தமிழ்நாட்டில் மாணவர் சேர்க்கை 51.4 வீதம் என்ற அளவுக்கு மிக உயர்ந்திருக்கிறது. தமிழ்நாட்டின் மாணவர் சேர்க்கை வீதம் தேசிய அளவிலான சராசரியை விட இரண்டு மடங்கு அதிகம் என்பது உயர்கல்வியில் தமிழ்நாடு நிகழ்த்தியுள்ள சாதனையாகும். அதுமட்டுமல்ல, 17 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற விகிதத்தில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக விளங்குகிறது.

தமிழ்நாட்டில் 1,553 கல்லூரிகள் 52 அரசு மற்றும் தனியார் பல்கலைக்கழகங்கள், 1,096 தொழிற்கல்வி நிறுவனங்கள் ஆகியன உயர்கல்வி அளித்து தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சிக்குத் துணை நிற்கின்றன. தொழிற்கல்வியிலும் மருத்துவக் கல்லூரியிலும் மாணவர் சேர்க்கையில் 7.5 சதவீத இட ஒதுக்கீடு செய்து, சாதாரண நிலையில் உள்ளவர்களும் சிறந்த நிலைக்கு உயர வழி வகுத்துக் கொடுத்திருக்கிறது தமிழ்நாட்டு அரசு.

பல்கலைக்கழகத்தின் தரத் தையும் செயல்பாட்டையும் வடிவமைப்பதில் முக்கியப் பங்காற்றுவோர் துணை வேந் தர்கள்தான். நீங்கள் அனை வரும் அறிவியல்பூர்வமான சிந்தனைகளை மாணவர்களிடம் வளர்த்தெடுக்கும் வகையில் உங்கள் பணியை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வி என்பது ஒத்திசைவுப் பட்டியலில் இருப்பதை வைத்து, மத்திய அரசு தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி பிற்போக்குக் கருத்துகளைப் பாடத்திட்டங்களில் புகுத்தும் போக்கும் கவலைக்குரியதாக உள்ளது. கல்வி முழுமையாக மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்படுவதே இதற்குச் சிறந்த தீர்வாக அமையும்.

மாநிலத்தில் உள்ள கல்விக் கொள்கையின் அடிப்படையில் பல்கலைக் கழங்கள் செயல்பட வேண்டும் என்பதே இங்குள்ள மக்களின் விருப்பம். அதனை உணர்ந்து பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் செயல்பட வேண்டும், என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

# 240 பட்டதாரி பயிலுனர்களுக்கு இன்னும் திருமலையில் நிரந்தர நியமனம் இல்லை!

## இம்ரான் மஹ்றூப் எம்.பி. அமைச்சருக்கு சுட்டிக்காட்டு



(எஸ்.அஷ்ரப்கான்)

திருகோணமலை மாவட்டத்தில் விடுபட்டுள்ள 240 பட்டதாரி பயிலுனர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்றூப் கோரிக்கை விடுத்துள்ளார்.

அரசின் பட்டதாரி பயிலுனர் திட்டத்தில் இணைக்கப்பட்டு இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படாத இந்தத் தொகையினருக்கே நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பொதுநிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் அமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பட்டதாரி பயிலுனராகப் பணியாற்றிய பலருக்கு நாடளாவிய ரீதியில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் 240 பேர் தவிர்ந்த ஏனையோருக்கும் இந்த நிரந்தர நியமனம் கிடைக்கப் பெற்றுள்ளது.

எனினும், நிரந்தர நியமனம் கிடைக்கப் பெறாத திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த 240 பேரினதும் தகவல்கள் அமைச்சின் தரவுத்தளத்தில் இற்றைப்படுத்தப்படாமையே நிரந்தர நியமனத்தில் இருந்து இவர்கள் விடுபட்டமைக்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் என்னை நேரில் சந்தித்த திருகோணமலை மாவட்ட பட்டதாரி பயிலுனர் சங்க பிரதிநிதிகள் விடுபட்ட பயிலுனர்களின் பெயர்ப்பட்டியலை பிரதேச செயலக ரீதியாக என்னிடம் ஒப்படைத்துள்ளனர். அந்தப் பெயர்ப் பட்டியல் தங்களது கவனத்திற்காக இதனுடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகின்றது. எனவே, இதனைக் கவனத்தில் கொண்டு இந்தப் பட்டதாரி பயிலுனர்களுக்கும் நிரந்தர நியமனம் கிடைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கலாசார மத்திய நிலையம் ஏறாவூர் - செங்கலடியில்







ஏறாவூர் – செங்கலடி பிரதேச கலாசார மத்திய நிலையம் நேற்று வெள்ளிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்ட இந்த நிலையம் தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் மேம்பாட்டு அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரம நாயக்க அவர்களின் பங்குபற்றுதலுடன் பிரதேச கலைஞர்களிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதேச கலைஞர்கள், புத்தசாசன கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் கலாநிதி பிரசாத் ரணசிங்க, மட்டக்களப்பு மாவட்ட செயலக காணிப்பிரிவிற்கான மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நவரூப ரஞ்ஜினி முகுந்தன், உதவி மாவட்ட செயலாளர் ஏ.நவேஸ்வரன், ஏறாவூர்பற்று பிரதேச செயலாளர் கே.தனபாலசுந்தரம், மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் எஸ்.ஜெய்னுலாப்தீன் மற்றும் கலாசார மத்திய நிலையங்களின் உத்தியோ கத்தர்கள் உள்ளிட்ட மாவட்ட செயலக, பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் இதன்போது கலந்துகொண்டனர்.

கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் மாணவர்களாலும்கலாசாரமத்தியநிலையங்களின் மாணவர்களாலும் கண்கவர் கலைநிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன. அமைச்சரினால் கலாசார மத்திய நிலையத்திற்கான இசைக் கருவிகள் மற்றும் நூல்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.





# மட்டக்களப்பு பிராந்தியத்திற்கு புதிய உளநல மையம் ஆரம்பம்

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் உளநல மையம் நேற்று வெள்ளிக்கிழமை கல்லடியில் திறந்துவைக்கப்பட்டது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி குணசிங்கம் சுகுணன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக சுகாதார அமைச்சின் உளநலதுறைக்குப்பொறுப்பான பணிப்பாளர் வைத்திய கலாநிதி ரொகான் ரத்நாயக்க கலந்துகொண்டார். சிறப்பு அதிதியாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் உளநலப்பிரிவின் வைத்திய நிபுணர்களான ரீ.கடம்பநாதன், ஆர். கமல்ராஜ் அகியோர் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்தனர்.

# குச்சவெளியில் மகளிர் தினம்

(பைஸல் இஸ்மாயில்)

*சர்வதேச மகளிர் தினத்தையொட்டி 'நாடும் தேசமும் உலகும் அவளே' எனும் தொனிப்பொருளில் குச்ச வெளி பிரதேச சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுபுல்மோட்டை உப அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் தவிசாளர் ஏ.முபாறக் தலைமையில் இடம்பெற்றது.*

*பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே. முரளிதரன் கலந்துகொண்டு சிறப்பித்தார்.*

*இந்நிகழ்வின்போது, பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பத்தினருக்கு வாழ்வாதார உதவியாக தையல் இயந்திரம், மிளகாய் அரைக்கும் இயந்திரம், மலசலகூட கூரைதத்தகடு என்பன பிரதம அதிதி மற்றும் தவிசாளரினால் வழங்கி வைக்கப்பட்டன.*



# மேற்கிந்தியத் தீவுகளுடனான முதலாவது டெஸ்ட் போட்டி இரண்டாவது இன்னிங்ஷில் இங்கிலாந்து அணி பதிலடி!




மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான முதலாவது டெஸ்ட் போட்டியின் நான்காவது நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தபோது தனது இரண்டாவது இன்னிங்ஷில் துடுப்பெடுத்தாடிவரும் இங்கிலாந்து அணி ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து 217 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

8 ஆம் திகதி ஆரம்பமான இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, தனது முதல் இன்னிங்ஷில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 311 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. ஜொனி பேயர்ஸ்டோ 140 ஓட்டங்களையும் பென் போக்ஸ் 42 ஓட்டங்களையும் எடுத்தனர். மேற்கிந்திய தீவுகள் அணியின் ஜெய்டன் சீல்ஸ் 4 விக்கெட்டுக்களையும் கெமர் ரோச், ஜேஸன் ஹோல்டர் மற்றும் அல்சாரி ஜோசப் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸை விளையாடிய மேற்கிந்திய தீவுகள் அணி, அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 375 ஓட்டங்களைப் பெற்றது. க்ருமா போனர் 123, ப்ரத்வைட் 55, ஜேசன் ஹோல்டர் 45 ஓட்டங்களை எடுத்தனர். இங்கிலாந்து அணியின் ஓவர்டொன், ஜக் லீச், பென் ஸ்டோக்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

அதையடுத்து தனது இரண்டாவது இன்னிங்சை விளையாட ஆரம்பித்த இங்கிலாந்து அணி நேற்றைய நான்காவது நாள் ஆட்ட நிறைவில் ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து 217 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஜக் க்ரௌலி 117 ஓட்டங்களோடும், அணித்தலைவர் ஜோ ரூட் 84 ஓட்டங்களோடும் ஆட்டமிழக்காதிருந்தனர். இன்று போட்டியின் இறுதி நாள் ஆட்டம் தொடரவுள்ளது.




## இங்கிலாந்து கழக அணிக்கு விளையாட இந்தியக் கிரிக்கெட் வீரர் புஜாரா ஒப்பந்தம்

இந்திய டெஸ்ட் கிரிக்கெட் வீரரான புஜாரா இங்கிலாந்தின் கவுன்டி கிரிக்கெட்டில் வருகிற சீசனில் விளையாட முடிவு செய்துள்ளார்.

உள்நாட்டில்நடைபெறும் இலங்கையுடனான டெஸ்ட் தொடரில் அவருக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. அத்தோடு சமீபத்தில் முடிவடைந்த ஐ.பி.எல். ஏலத்திலும் எந்த அணியும் அவரை ஏலத்தில் எடுக்காத நிலையில், இங்கிலாந்தின் கழக அணிகளுக்கிடையிலான தொடரில்விளையாடுவதற்கு புஜாரா தீர்மானித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இங்கிலாந்து கவுன்டி கிரிக்கெட் தொடர் அடுத்த மாதம் 7 ஆம் திகதி தொடங்கவிருக்கிகிறது. சசெக்ஸ் அணியில் இடம் பெற்றிருந்த ஆஸ்திரேலியாவின் ட்ராவிஸ் ஹெட் பணிச்சுமை காரணமாக விலகியமையையடுத்து, அவருக்குப் பதிலாக புஜாரா அந்த அணியில் ஒப்பந்தமாகியுள்ளார். சசெக்ஸ் கழகத்திற்கு தனது பங்களிப்பை வழங்கிடும் வாய்ப்பினை ஆர்வமுடன் எதிர்நோக்கி இருக்கிறேன் என புஜாரா கூறியுள்ளார். இந்த சீசனின் முதல் சம்பியன்ஷிப் போட்டியிலிருந்துஅணியோடுஇணைந்து கொள்ளவுள்ள புஜாரா, ரோயல் ஒருநாள் கிரிக்கெட் தொடரின் இறுதி வரை தம்மோடு இருப்பார் என்று சசெக்ஸ் அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது.



## பாகிஸ்தானின் ராவல்பிண்டி டெஸ்ட் ஆடுகளம் சராசரிக்கும் குறைவானதென ஐ.சி.சி. கருத்து

பாகிஸ்தான் - ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் இரண்டாவது போட்டி இன்று ஆரம்பமாகியிருக்கிறது. இந்த நிலையில், இரு அணிகளும் முதலாவது போட்டியில் மோதிய ராவல்பிண்டி ஆடுகளம் சிறந்ததாக இல்லை என சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) கூறியுள்ளது.

பாகிஸ்தான் - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான முதல் டெஸ்ட் போட்டி கடந்த 4 ஆம் திகதி ராவல்பிண்டியில் ஆரம்பமாகி நடைபெற்றது. அந்தப் போட்டியில் நான்கு நாள்களைக் கடந்தும்கூட, இரு அணிகளினதும் முதல் இன்னிங்ஸ்கள் முடிவடைந்திருக்கவில்லை.

ஆட்டத்தின் கடைசி நாளில் தனது இரண்டாம் இன்னிங்ஸை தொடங்கிய பாகிஸ்தான் அணி 77 ஓவர்கள் விளையாடி விக்கெட் இழப்பின்றி 252 ஓட்டங்களைச் சேர்த்தது. அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் இருவரும் சதமடித்தனர்.

அந்தப் போட்டி நடைபெற்ற ராவல்பிண்டி ஆடுகளம் குறித்து ஐ.சி.சி. தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது. ராவல்பிண்டி ஆடுகளமானது துடுப்பாட்டம், பந்துவீச்சு இரண்டிற்கும் சமமான பங்களிப்பைக் கொடுக்கவில்லை.

ஐந்து நாள்களில் ஆடுகளத்தின் தன்மை மாறவேயில்லை. குறிப்பாக, பந்துவீச்சாளர்களுக்கு ஏற்ற சாதகத் தன்மைகள் எதுவுமே அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இதனால், ராவல்பிண்டி ஆடுகளம் சராசரிக்கும் குறைவானது, என மதிப்பிடுவதாக ஐ.சி.சி. கூறியுள்ளது.

## மகளிர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் ஆஸ்திரேலிய அணி முன்னிலையில்

நியூசிலாந்தில் நடைபெற்றுவரும் மகளிர் ஒருநாள் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் ஆஸ்திரேலிய அணி 2 போட்டிகளில் விளையாடி இரண்டிலும் வெற்றிபெற்று 4 புள்ளிகளோடு புள்ளிப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளும் தலா 4 புள்ளிகளைப் பெற்று பட்டியலில் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன. இந்தியா 2 புள்ளிகளோடு 5 ஆம் இடத்திலும், இங்கிலாந்து, பங்களாதேஷ், பாகிஸ்தான் அணிகள் விளையாடிய போட்டிகள் அனைத்திலும் தோல்வியுற்று இறுதி மூன்று இடங்களிலும் உள்ளன.



# விபத்துகளின்போது வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையும் அதிகரிப்பு!

## தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தகவல்



தொழிலாளர் இழப்பீட்டுத் திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சட்டமூலத்தைசமர்ப்பித்துஉரையாற்றிய தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, நபர் ஒருவர் பணியில் ஈடுபடும்போது, விபத்துக்குள்ளானால், வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையை ஐந்து லட்சம் ரூபாவிலிருந்து 20 லட்சம் ரூபா வரை அதிகரிக்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார். தனியார் துறையில் ஊழியர் சேவைக்கு வரும்போதோ, பணியிலிருந்து திரும்பும்போதோ விபத்துக்குள்ளானால், இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுவதில்லை. இந்நிலையில், இந்த இழப்பீட்டு திருத்தச் சட்டமூலத்தில் அவர்களுக்கும் இழப்பீடு வழங்கப்படும். இந்த இழப்பீடு தொடர்பான சட்டம் 16 வருடங்களின் பின்னர் திருத்தப்படுகிறது.

கடமையில் ஈடுபட்டிருக்கையில் அனர்த்தத்துக்கு முகம் கொடுத்தால் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நஷ்ட ஈடு வழங்கும் சட்டம் 08 தசாப்தங்களுக்கு முன்னர் தயாரிக்கப்பட்டது. 2005 இல் இந்தச் சட்டம் திருத்தப்பட்டு நஷ்ட ஈட்டுத் தொகை அதிகரிக்கப்பட்டது. கடந்த 16 வருடங்களாக இந்தத் தொகை அதிகரிக்கப்படவில்லை. சம்பளத் தொகை அதிகரித்துள்ளது.

வேலையாள்கள் நஷ்டஈடு திருத்தச் சட்டமூலத்தை திருத்துவதாக தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஜனாதிபதி தெரிவித்திருந்தார். அதன் பிரகாரம் இந்தத் திருத்தம் தொடர்பில் தொழிற் சங் கங்களுடனும் முதலாளிமார்க ளுடனும் கலந்துரையாடினேன்.

தோட்டத் தொழிலாளர் ஒருவரை பாம்பு கடித்தால் நஷ்ட ஈடு கிடைக்காது. வேலைத் தளத்திலிருந்து வீட்டுக்கு வருகையிலோ, தொழிலுக்கு வருகையிலோ அனர்த்தம் நடந்தால் நஷ்டஈடு கிடைக்கும் வகையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அரச ஊழியர்களைப் போன்றே தனியார் ஊழியர்களுக்கும் நஷ்டஈடு கிடைக்க இந்தத் திருத்தங்கள் வழிவகுக்கும்.

ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை நிதியத்தை வழங்காவிடின் 50 வீத அபராதம் விதிக்கப்படுகிறது. பணத்தை வழங்குவதை தாமதித்தால் 05 முதல் 30 வீத அபராதம் விதிக்க புதிய திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இந்த அபராதத் தொகை ஊழியர்களுக்கு கிடைக்கும். ஊழியர்களின் நலனுக்காக இந்தத் திருத்தங்கள் செய்யப்படுகின்றன என தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மேலும் தெரிவித்தார்.

## நிபந்தனைகளற்ற ஆதரவை அரசுக்கு எதிரணிகள் வழங்க முன்வரவேண்டும்!

### கோருகின்றார் எஸ்.பி. திஸாநாயக்க

தேசிய அரசு என்பதற்கு அப்பால், தற்போதைய சூழ்நிலையில் எதிரணிகள் நிபந்தனையற்ற ஆதரவை அரசுக்கு வழங்க வேண்டும் என்று கைத்தொழில் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

நுவரெலியாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

உலக சந்தையில் இன்று பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன. கொள்கலன்களுக்கான போக்குவரத்துக் கட்டணமும் அதிகரித்துள்ளது. இவற்றின் தாக்கம் இலங்கையிலும் எதிரொலிக்கின்றது. பெரும் நஷ்டத்துக்கு மத்தியிலேயே எரிபொருள் விநியோகிக்கப்படுகின்றது. நஷ்டத்தை அரசு தாங்கி வருகின்றது. இவ்வாறான நெருக்கடி நிலையில் இருந்து கட்டங்கட்டமாகவே மீளவேண்டும்.

இன்னும் ஒரு வாரத்துக்குள் மின்சாரம் மற்றும் எரிபொருள் நெருக்கடி தீரும். ஆடைக் கைத்தொழில்மூலம் வருமானம் வரத் தொடங்கியுள்ளது. சுற்றுலாத்துறையும் எழுச்சி கண்டுவருகின்றது. வெளிநாடுகளில் தொழில் புரிபவர்கள் பணம் அனுப்புகின்றனர்.

இது நெருக்கடியான கால கட்டம். எனவே, தேசிய அரசு என்பதற்கு அப்பால் எதிரணிகள் அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்க வேண்டும். பிரிட்டன் போன்ற நாடுகளில் அவ்வாறு நடக்கின்றன. பிற நாடுகளில் அரச ஊழியர்களின் சம்பளம் குறைக்கப்பட்டது. ஆனால், நாம் அவ்வாறு செய்யவில்லை. எனவே நெருக்கடி நிலைமையை நாம் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

நாட்டின் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைக்கு நல்லாட்சி அரசும் பொறுப்புக்கூறவேண்டும். – என்றார்.

## மின்சாரக் கட்டணம் அதிகரிக்க வாய்ப்பு!

மின்சாரக் கட்டணத்தையும் அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மின்சாரக் கட்டணத்தைக் கண்டிப்பாக உயர்த்த வேண்டிய தேவை உள்ளது. மின்சார சபையால் மின்சாரம் வழங்க முடியாவிட்டால் என்ன செய்வது. எனவே, மின் கட்டணத்தை கண்டிப்பாக உயர்த்தவேண்டியதேவை ஏற்பட்டுள்ளது. ஆனால் எப்போது நடக்கும் என்று கூற முடியாது. – என்று தெரி வித்தார்.

## அனைத்து மாணவர்களையும் பாடசாலைகளுக்கு அழைப்பு!

*எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் அனைத்து மாணவர்களையும் பாடசாலைகளுக்கு அழைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.*

*இது தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளரால் சுற்றறிக்கை வெளியிடப் பட்டுள்ளது.*

## ஹெரோயினுடன் பெண் யாழ். கட்டுவனில் கைது



தெல்லிப்பழை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கட்டுவன் மேற்கு பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் 240 மில்லிக்கிராம் ஹெரோயின் போதைவஸ்துடன் நேற்று (வெள்ளிக்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழை பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் தெல்லிப்பழை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் தெல்லிப்பழை பொலிஸார் இணைந்து இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கோதுமைமா விலை எகிறல் மலையக மக்கள் விசனம்!





நாட்டில் பொருள்களின் விலைகள் தொடர்ச்சியாக அதிகரித்து வரும் சூழ்நிலையில், கோதுமை மாவின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளதால் மலையக மக்கள் பெரிதும் பாதிக்கப்படக்கூடும் என மலையக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மலையகத்தில் நகர் புறங்கள் மற்றும் பெருந்தோட்டப்பகுதிகளில் வாழும் மக்களுள் பெரும்பாலானவர்கள், தமது உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு கோதுமை மாவைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இதனால் மாதாந்தம் அதிகளவு கோதுமை மாவை அந்த மக்கள் கொள்வனவு செய்வார்கள். இந்நிலையில், கோதுமை மாவின் விலை 35 முதல் 40 ரூபா வரை அதிகரித்துள்ளதால் அது அவர்களின் வாழ்க்கைச் சுமையை மேலும் அதிகரிக்க வைக்கும்.

ஏற்கனவே பெருந்தோட்ட மக்களுக்கு உரிய வகையில் சம்பளம் வழங்கப்படுவதில்லை. தோட்டப்பகுதிகளில் நாள் சம்பளத்துக்கு வேலை செய்பவர்களின் சம்பளமும் அதிகரிக்கப்படவில்லை. இதனால் கோதுமை மா விலை அதிகரிப்பு அவர்களுக்கு பெரும் தாக்கமாக அமையும். அரசால் மாதாந்தம் 15 கிலோ கோதுமை மா பெருந்தோட்டத்தில் வேலை செய்யும் பதிவுசெய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு மாத்திரமே வழங்கப்படுகின்றது. அது கூட தங்களுக்குப் போதுமானதாக இல்லை எனவும் மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.03.2022இல் வெளியிடப்பெற்றது.